சார்பு நீதிமன்றம்,கோவில்பட்டி.

முன்னிலை-திருமதி.**M.அகிலாதேவி, எம்.எல்.,**

சார்பு நீதிபதி கோவில்பட்டி.

2019ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25ம்நாள், புதன்கிழமை.

**அ.வ.எண்.106/2019**

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், விளாத்திகுளம் டவுண், காமராஜ் நகர், கதவு எண்.261/37-I-ல் வசித்து வரும் சரவணன் மனைவி-34 வயதுள்ள திருமதி.T.அமிர்தசெல்வம். ...வாதி....

/எதிர்/

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், விளாத்திகுளம் டவுண், காமராஜ்நகர் 3வது தெரு கதவு எண்.6-11ல் வசித்து வரும் தேவசேனாதிபதி குமார் சுமார் 55 வயதுள்ள D.செல்வகுமார். ...பிரதிவாதி...

வாதி, உரிமையியல் நடைமுறைச்சட்டம் வகுமுறை 7 விதி-1ன்கீழ் வாதிக்கு, பிரதிவாதி இதன் துகை விபரத்தில் கண்டபடி துகை ரூ.4,49,733/-மும், அதில் அசல் துகை ரூ.4,00,000/-க்கு பிராது தாக்கல் தேதி முதல் துகை வசூலாகும் தேதி வரை 12% வட்டியும் சேர்த்து செலுத்தும்படிக்கும், இந்த வியாஜ்ஜிய செலவு வாதிக்குப் பிரதிவாதியிடமிருந்து கிடைக்கும்படிக்கும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்குரை தாக்கல் செய்யப்பட்ட நாள் - 27.06.2019.

வழக்குமூலம்- 11.06.2018, 10.06.2019 ஆகிய தேதிகளில் விளாத்திகுளம் தாலுகா, விளாத்திகுளம் டவுணில் வைத்து உற்பத்தி.

அதிகார வரம்பின் மதிப்பு - ரூ.4,49,733/-

நீதிமன்றக்கட்டணம்- பரிகாரத்தை ரூ.4,49,733/-ஆக மதித்து அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணச் சட்டம் பிரிவு 22-ன்படி ரூ.13,492/-இத்துடன் செலுத்தப்படுகிறது.

இந்த வழக்கில் வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S. சத்தியநாராயணன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகும்பொருட்டு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு அழைத்தும் வருகையின்றி ஒருதலைபட்ச தீர்ப்பாணைக்குட்படுத்தப்பட்ட நிலையில் வாதி தரப்பு வாதங்களைக்கேட்டும், சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்பாணை.**

1) வாதிக்கு, பிரதிவாதி ரூ4,49,733/-ம் அதில் அசல் தொகை ரூ.4,00,000/-க்கு பிராது தாக்கல் செய்த தேதியான 27.06.2019ல் இருந்து தொகை செலுத்தும் நாள் வரை 6% பின்வட்டியும் சேர்த்து தீர்ப்பு தேதியிலிருந்து(25.09.2019) 2 மாத கால அவகாசத்திற்குள் செலுத்தவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

2) வாதிக்கு, பிரதிவாதிவாதி, ரூ.18,506.50/-ஐ வழக்கு செலவுத்தொகையாக செலுத்தவேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.
(வாதியின் செலவு விபரம் ரூ.18,506.50/-)
(பிரதிவாதி தரப்பில் செலவு விவரப்பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை.)

<u>செலவு விவரப்பட்டியல்</u>

| | வாதி பக்கம் ரூ. பை. |
|---|---|
| வழக்குரைமேல் முத்திரைக் கட்டணம் | 13,492.00 |
| வக்காலத்து | 10.00 |
| வழக்கறிஞர் ஊதியம் | 5,000.00 |
| கட்டளைப்படி | 4.50 |
| மொத்தம். | 18,506.50 |

2019ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25ஆம் நாள் என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

(ஒம்)M.அகிலாதேவி.
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.

சார்பு நீதிபதி
கோவில்பட்டி
அ.வ.எண்.106/2019
தீர்ப்பாணை
நாள்.25.09.2019.